குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.158/2024

அ.சா.2

2025–ம் ஆண்டு ஜீன் 17–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தில்லைக்கரசி | தொழில் | |
| கணவர் பெயர் | கார்த்திக் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மாலை 06.20 மணி,

Accused Mariyappan @ Meenkara Mariayappan present. Advocte Mr.I.Jayakumar present for accused. APP Mr.M.Suresh Present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் பிருந்தாவன் நகர் 8 வது வீதியில் குடியிருக்கிறேன். நான் காமாண்டபட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 பால்ராஜ் என்பவரின் வீட்டில் நான் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். நான் தரைத்தளத்தில் குடியிருக்கிறேன். பால்ராஜ் மேல்தளத்தில் குடியிருக்கிறார். கடந்த 04.05.2024 ஆம் தேதி நான் அதிகாலை வீட்டை பூட்டிவிட்டு எனது குடும்பத்தோடு ஊட்டியில் பணிபுரியும் எனது கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

2. இரவு 02.00 மணியளவில் அ.சா.1 பால்ராஜ் எனக்கு போன் செய்து, எனது வீட்டின் முன்பக்க கேட் மற்றும் மெயின் வாசல்கதவை உடைத்து, ஒரு நபர் உள்ளே சென்று பீரோ, அலமாரி ஆகியவற்றை திறந்ததாகவும், அப்போது பால்ராஜ் வந்து சத்தம்போட்டவுடன், அந்த நபர் பால்ராஜ்–ஐ தள்ளிவிட்டு, பின்பக்க காம்பவுண்ட் சுவரில் ஏறி குதித்து ஓடிவிட்டதாகவும் சொன்னார்.

3. இதுசம்மந்தமாக பால்ராஜ் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என் வீட்டில் பொருட்கள் எதுவும் திருடுபோகவில்லை. போலிசார் விசாரித்தார்கள்.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.06.17 18:57:50 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. சம்பவம் பற்றி தெரிந்து, எத்தனை மணிக்கு நான் வீட்டிற்கு பார்த்தேன் என்றால், எனது கணவருக்கு விடுமுறை இல்லாததால், நான் வீட்டிற்கு வரவில்லை. அ.சா.1 ஐ இதுசம்மந்தமாக புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருந்தேன். முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் காவல் துறையினர் சொல்லிதான் எனக்கு தெரியுமா என்றால், அ.சா.1 சொல்லி எனக்கு தெரியும். அதன்பின் போலிசாரும் என்னை போனில் தொடர்பு கொண்டு தகவல் சொன்னார்கள்.

5. எத்தனை நாட்கள் கழித்து நான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் எனது கணவர் ராணுவத்தில் பணியாற்றுவதால் அவருக்கு விடுமுறை இல்லை. 15 நாட்கள் கழித்து தான் நான் சம்பவ இடம் வந்து பார்த்தேன். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. போலிசார் எத்தனை மணிக்கு சம்பவ இடம் வந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரி. சம்பவம் நடந்த அரைமணி நேரத்தில் வந்துவிட்டதாக அ.சா.1 கூறினார். போலிசார் எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால், சம்பவம் நடந்த அன்றே போன் மூலம் விசாரித்தார்கள்.

**விசாரணை முடிந்த நேரம் : மாலை 06.29 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.06.17 18:57:54 +0530